உ

சிவமயம்



# அருள்மிகு பாண்டிருப்பு ஸ்ரீ திரௌபதையம்மன் ஆலய வழிபாடும் வரலாறும்

[illegible] பாஸ்கரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரம்

| | |
|---|---|
| நூலின் பெயர் | : வழிபாடும் வரலாறும் |
| ஆசிரியர் பெயர் | : திரு. தி. பாஸ்க்கரன் (பாண்டித்துமிலன்) |
| மொழி | : தமிழ் |
| பதிப்பு விபரம் | : இரண்டாம் பதிப்பு |
| பதிப்பு ஆண்டு | : 2008 |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| வெளியீடு | : வதனா வெளியீடு |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

பல்வகைச் சிறப்பும் ஒருங்கே பொருந்தப் பெற்ற பாண்டிருப்புக் கிராமத்திலே பலநூறு வருடங்களுக்கு முன்னே தாதன் என்னுந் தபசியினால் தாபிக்கப்பட்ட ஸ்ரீ திரௌபதையம்மன் ஆலய வழிபாட்டுச் சிறப்பும் வரலாற்றுப் பெருமையும் இந்நூலின் பாடல் வரிகளாகக் கொண்டு என் குரு சிவஸ்ரீ மா.கு. சதாசிவ ஐயர் அவர்கட்கு சமர்ப்பிக்கின்றேன்.

இவ்வண்ணம்
பாண்டித்துமிலன் (பாஸ்க்கரன்)
இல. 202/1, விவேகானந்தர் வீதி,
பாண்டிருப்பு–01
கல்முனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருவின் நல்லாசி

கங்கை வளமும் காவேரி நீர்வளமும்
மங்காத் தமிழ் வளமும் மாறாத் திருநாட்டில்
சிந்துநதி பெருகி திரைபுரண்ட தன்மையினால்
வந்தேயுதித்ததிந்த வளமான சீரிலங்கை

பாண்டவரும் பாஞ்சாலி பரந்தாமன் தன்னுடனே
பூண்டகருணை பொலிவு பெறுந் தன்மையினால்
பாண்டிருப்பென்ற பழம்பெருமை பார்புகழ்
தன்னகத்தே கொண்டு தனிப்பெருமை கொண்டதுவும்

வாழை பலாக்கனியும் வான்கமுகு தேன் கரும்பு
மாறாது என்றும் விரிந்து பொலிந்திருக்கும்
செந்நெல் வயலும் சீர்களனி சேலினமும்
பன்னல் குமுதம் பசுவல்லி பாரில் சிறக்கும்

சீரோங்கு செல்வத் திருவிளங்கு பாண்டிருப்பில்
ஏரோங்கு வேழாளர் நற்குடியில் வந்துதித்த
பேரோங்கு திருவிளங்கம் பிதா மாதா ராசம்மா
பாரோங்கு செய்தவப்பயனாக பாஸ்கரனும்

பார்ப்பார் குலத்துப் பஞ்சாட்சரம் வளிவந்த
மாணிக்கமீன்ற மணிவிளக்காய் திகழும்
சதாசிவனார்தன்னை தன் குருவாய்க கொண்டு
பாரதமும் கந்தப் புராணமும் கற்றுணர்ந்தார்

ஐந்துகரத்தனையும் ஆறுமுகத்தனையும்
பரந்தாமன் பாண்டவர்கள் பாஞ்சாலி தன்னையும்
சிந்தையிலே உதித்த சிந்தனையினால துதித்து
பந்தமறப் பாடப் பரம் பொருளே நீதுணையே

இவ்வண்ணம்
அமரர் சிவஸ்ரீ மா.கு. சதாசிவ ஐயர்
அவர்கள்
(முதல் பதிப்புக்கு வழங்கியது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிரியர் உரை

ஒரு சமூகத்தின் பண்பாடு எத்தகையது என்பதை அறிந்து கொள்ளும் வழி ஒன்றுள்ளது. அதாவது அவ்வூரிலுள்ள கோயில்களின் சிறப்பும் , வழிபாட்டு முறைகளும் மக்களின் பண்பாடு கலாச்சார விழுமியங்களுமே. இந்து சமயிகளின் வாழ்க்கையானது கிரியைகள், சடங்குகள், அனுஷ்டானங்கள்இ சம்பிரதாயங்கள் ஆகியவற்றுடன் தொடர்புடையது.சீலம் அல்லது நல்லொழுக்கத்திற்குச் சான்றாக மஹாபாரதம் அமைந்திருக்கின்றது. மஹாபாரதத்தில் பதினெட்டு என்னும் எணண்ணிக்கை முக்கியமான இடம் பெற்றிருக்கிறது.அதே போன்று பாண்டிருப்பு ஸ்ரீ திரௌபதையம்மன் ஆலய வருடாந்த பதினெட்டு நாட்பூசையானது கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பதினெட்டாம் நாட்பூசையான தீமிதிப்புடன் இனிதே பத்தொன்பதாம்நாள் பால்பள்ளயத்துடன் நிறைவு பெறுகிறது.இப்பூசை விதிமுறைகள் மஹாபாரதம் என்னும் பெரியநூலில் பலநூற்றாண்டுகளாக மக்கள் உள்ளத்தில் ஓர்சீரிய இடம்பெற்றுள்ளது. இப்பாடல்களில் இக்கோயிலின் வழிபாட்டுமுறைகளை எளிமையான உரைநடையில் பாடலாக "வரலாறும் வழிபாடும்" நூல்வடிவாகத் திகழ்வதற்கு எனது பலகால மஹாபாரத பாடலுக்கு உரைகூறும் பயிற்சியும் எல்லாம் வல்ல ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் அனுஷ்டானமும், எமது கிராமத்தை காத்து ரட்சித்துக் கொண்டிருக்கும் அகிலாண்ட கோடி பிரமாண்ட நாயகனாம் அவதார புருஷன் ஸ்ரீமன் நாராயண மூர்த்தியினதும் தேவி திரௌபதையின் அனுக்கிரகமும் கிடைத்தமையே. உங்கள் கைகளில் பரிமளிக்கும் இந்நூலை படித்துச் சுவைத்து பயன்பெறுவது உங்கள் உரிமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓம் கணபதி துணை

பாண்டவர் கோயில் வந்ததை
பக்குவமாகவே பாடுவதற்கு
வேண்டும் வரந்தனை தந்தருள்வாய்
விக்கினந் தீர்க்கும் விநாயகனே

ஆலை அரசு கொக்கட்டியும்
அத்தி மருதை இலுப்பைமரம்
சோலை வனமாய் நிறைந்ததனால்
சொல்லி வைத்தார் ஆலம் சோலையென்று
ஆலம் சோலையென்னும் பெயரதனை
ஆதியில் ஊரவர் கூறிவந்தார்
காலம் ஐநூறு ஆண்டுமுன்னே
அம்மை திரௌபதை பாண்டவர்க்கு
கோயில் அமைத்த காரணத்தால்
பாண்டிருப் பென்னும் பேராச்சு



கங்கை ஜமுனை சிந்துவொடு
காவிரி வைகை நதிபாய்ந்து
இங்கிதம் பொங்கும் திருநாடு
இந்தியா வென்னும் பெருநாடு
கொங்கர் குடிகொண்ட தேசமது
கொங்க தேசமென்று தானழைப்பார்
அங்கிருந்தானொரு நற்தபசி
ஆதிபரமனைப் போல் வடிவாம்
இங்கிதமாகவே இங்குவந்தான்
ஏழுமலையானைக் காண வென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தனன் தாதன் இலங்கைநகர்
வள்ளி தெய்வானை நாயகனாம்
கந்தன் குடிகொண்டு அருள் சுரக்கும்
கதிரை மலைதனைச் சென்றடைந்து
பந்தமில்லாத குணமுடையோன்
பக்குவமாக வணங்கியபின்
வந்த பணிதனைத் தான்தொடர
வனங்கள் கடந்து நடைநடந்து
திங்கள் நிலவென நீறணிந்தோன்
தீர்க்கமாய் கீழ்த்திசை நோக்கி வந்தான்

வந்தான் வனங்கள் பலகடந்து
வாழும் மிருகம் பறவைகளை
கண்டு மகிழ்ந்து வழிநடந்து
கானகம் விட்டு ஊர்நோக்கி
அந்தணன் போலும் வடிவுடையோன்
அக்குமணிமாலை தானணிந்தோன்
சங்கமன் கண்டிப் பிள்ளையாரை
சாட்சாங்கமாகவே தான்பணிந்து
தெங்கு கமுகு செழித்தோங்கும்
திருக்கோயிலூரை வந்தடைந்தான்

திருக்கோயிலூரில் சிலகாலம்
சித்திரவேலனைத் தான்வணங்கி
கரத்தில் கமண்டலங் கொண்டவனும்
காட்டினான் அற்புதம் ஊரவர்க்கு
அற்புதங் கண்ட ஊரவரும்
ஆச்சரியங் கொண்டு மகிழ்வாக
செப்பற்கரிதான அற்புதத்தின்
சேதியை கூறிட வேண்டுமென்று
கலிங்கர் குலத்து காவலனை
கண்டு அதிசயங் கூறினரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தியைக் கேட்டு மகிழ்வடைந்த
தேசுத்து வன்னிமை ஊரவரை
உதவியாய் கூட்டி அழைத்தெடுத்து
ஒன்றாகச் சேர்ந்து நடைநடந்து
அதிவேகமாகவே தான்நடந்து
ஆலயந்தன்னையும் வந்தடைந்தார்
வந்தவர் கண்டனர் தாதனையும்
வடிவேல் குடிகொண்ட ஆலயத்தில்
விந்தை மகிழ்ந்திடத்தாதனையும்
வீழ்ந்து வணங்கினர் ஊரவர்கள்

வன்னிமையோடு ஊரவர்கள்
வணங்கிடக் கண்ட தாதனுமே
கண்ணியமாகவே ஆசிசொல்லி
காட்டினான் அற்புதம் பற்பலவும்
அற்புதங்கள் பல கண்டதுமே
ஆனந்தங்கொண்ட மனத்தோடும்
எத்திசையும் புகழ் பூத்தவனாம்
எதிர்மன்ன சிங்க வன்னிமையும்
சித்தம் மகிழ்வாக தாதனிடம்
சேதிகள் கேட்டு அறியலுற்றான்

இந்திய தேசத்திலோர் நாடு
இங்கிதம் பொங்கிடும் கொங்கதேசம்
அங்கிருந்தே வந்த சேதிதனை
சங்கை படத்தாதன் கூறியதும்
வந்ததன் நோக்கம் என்னவென
வரிசையாய் வன்னிமை கேட்டதுமே
அந்தணன் போலும் வடிவுடையான்
அடுக்காகவே நோக்கம் கூறலுற்றான்
பாரதநற்கதை தன்னையுமே
பண்ணாகப் பாடி உரைகூறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீரோடு பாண்டவர் பத்தினிக்கு
சிறப்பாக ஆலயந்தானமைத்து
பேர்பெறு பாரத நற்கதையை
பாரிலுள்ளோரும் தானறிய
பாரதம் பதினெட்டு நாள்பூசை
பக்குவமாக நடத்துவதற்கு
சேரவே ஆலயந்தானமைக்க
செப்பமாய் ஓரிடம் வேண்டு மென்று
கூறலும் வன்னிமை தான்கேட்டு
குறையேதுமில்லாமல் ஏற்றனனே

தாதனுக்கு தரம் கூறியபின்
தக்கதோர் வன்னிமை ஊரவரும்
ஓதம் முழங்கு கடலருகே
ஓரிடந்தேடிக் காண்பதற்கு
தாதனின் சம்மதந்தானறிய
தரைவழியாக நடைநடந்து
காடும் செடியும் கடந்து வந்து
கண்டனரே ஆலம் சோலைதனை
தேடுமிடம் தனைக்கண்டதுமே
தெய்வத்தின் சந்நிதிக்கேற்றதென்று

உளப் பொலிவாகவே கோயில் கட்ட
கிழக்குப் புறமாய் சமுத்திரமும்
மேற்குத் திசையில் வயல் வெளியும்
தளப்பமில்லாமலே கண்டதனால்
தக்க இடமெனக் கண்டபின்னே
கொக்கட்டி மரநிழல் தன்னிலொரு
கோயில் அமைத்திட வேண்டுமென்று
தாதன் மொழிப்படி வன்னிமையும்
தக்கசனங்களும் ஒன்றாக
கூடியே கொத்துக் குழை எடுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலைமரநிழற் சோலைதனில்
அமைவாகக் கால்கள் தறித்தெடுத்து
சேமமதாகவே நற்தினத்தில்
கோயில் அமைத்தனர் பக்குவமாய்
பக்குவமான நிலையமதில்
பந்தலைக்கட்டி முடித்த பின்னே
பத்தாசி தப்பாமல் பூசைபண்ண
பார்த்தெடுத்தான் புரட்டாதி மாதமது
அத்தினம் அமாவாசைத் திதியதனில்
அடுத்திடு செவ்வாய் கிழமை தனில்

ஆலயந்தனில் பூசைபண்ண
ஆய்தெடுத்தே நல்லநாளதனை
பூவொடு வாழைக் கனியெடுத்து
புத்தம் புதுப்பழம் பாக்குடனே
பச்சை அரிசுடன் வெற்றிலையும்
பண்டாரப் பொட்டும் தானெடுத்து
அட்ஷரம் வைத்து உருக்கொடுத்து
அலைகடல் ஓரம் மடைபரப்பி
கும்பம் நிறுத்தி உருக்கொடுத்து
கொலுவாக நின்று வலம்வந்து



பூசை முடித்து சாமமதில்
புத்தம் புதுவெள்ளைச் சேலைதனில்
கேசவன் பத்து அவதாரம்
கீர்த்தி விளங்கவே தானெழுதி
சோதி விளங்க விளக்கேற்றி
சொல்லியவாறு மடை பரப்பி
கற்பூர தீபமும் தான் காட்டி
கண்ணன் திருவடிதான் வணங்கி
கம்பம் நிறுத்தி கொடியேற்றி
கணபதி பூசையுந்தான் முடித்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாம் நாள் பூசைதனை முடித்து
இரவு கழிந்த சாமமதில்
சலந்தனைக் கொண்டு தலைமுழுகி
சாட்டாங்கமாகவே நீறணிந்து
மலர்ந்த மலரொடு வெற்றிலையும்
மற்றுள்ள பாக்கு பழத்துடனே
சுகந்த மணந்தரும் கமுகின்பூ
சுறுக்காயெடுத்து மடைபரப்பி
பாண்டவர் பத்தினி திரௌபதிக்கு
பட்டு பீதாம்பரம் கட்டிவைத்து

அலங்காரம் செய்து உருக்கொடுத்து
ஆலயந்தன்னுள்ளே பூசைசெய்து
கொலுவும் நிறுத்தி பூசைபண்ணி
கோயிலைச் சுற்றி வலம்வந்து
சிலம்பு உடுக்கை பறைமுழங்க
சென்றிடுவார்கள் ஊர்வலமாய்
ஊர்வலம் சென்று காட்டினிலே
உயர்ந்ததோர் வீரை மரந்தறித்து
பேர்பெறுநாட்கால் தானெடுத்து
பெரியோர் புடைசூழக் கொண்டுவந்து

தாதனும் பாண்டவர் கொலுவினரும்
தக்கதோர் நாட்கால் தனையெடுத்து
சூதானமாகவே ஆலயத்துள்
சுடரொளி வீசவே வைத்தபின்னே
மாலைப்பொழுது பூசை பண்ணி
மண்டாட்டுப்பாடி வலம் வந்து
தேசம் புகழ்ந்திடு பாரதத்தை
தெளிவாகப் பாடல் பாடுவதற்கு
பூசை முடித்து ஏடவிழ்த்து
புண்ணியன் தாதனும் பாடினனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதினெட்டு நாளும் பூசைதனை
பக்தி சிரத்தையாய் செய்முறையே
அதிகாலை தன்னில் தலைமுழுகி
ஐவராயுள்ளோரை கொலுநிறுத்தி
முப்புரி நூலொடு உருத்திராட்சம்
முறையாய் திருநீறு தானணிந்து
தப்பிதமில்லாமல் காப்புக்கட்டி
தக்கதோர் பண்டாரப் பொட்டணிந்து
கற்பூரதீபமும்தான் காட்டி
கனிவாக மண்டாட்டுப் பாடிவைத்தான்

மண்டாட்டுப் பாடி நமஸ்கரித்து
மகிமைபெறு சமயப் பேழையுடன்
அம்மானைக் காயோடு முக்கோண
அதிசயமான சிலம்பெடுத்து
உட்பிரகாரந் தனிலிருந்து
உருவுடன் மண்டபந் தன்னில் வைத்து
பாண்டவர் கொலுவுடன் தாதனுமே
பக்தியாய் வெளிவீதி சுற்றிவந்து
மண்டபந் தன்னில் வந்து நின்று
மாலையும் காலையும் பூசை செய்தான்

ஏழாவதுநாள் முகூர்த்தமதில்
எழுந்தருளள் செய்து கண்ணனையும்
தாளம் உடுக்கை சிலம்பொலிக்க
தக்கதோர் தேரினில் கொண்டு வந்து
பாளையுடன் பாக்கு வெற்றிலையும்
பச்சை அரிசியில் அமுது செய்து
வேளையாம் சாமம் மூன்றதனில்
வேண்டிய ரொட்டி பழம் வைத்து
பூசையும் செய்து அரிராமர்
தோத்திரம் பாடி முடித்தனனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பனிரெண்டாம் நாளான சனிக்கிழமை
பாஞ்சாலி திருமணந் தளக்கேற்ற
பந்தல்கால் தன்னைத் தறித்தெடுக்க
வடக்காகப் பாண்டிருப்பெல்லை சென்று
வாகான பந்தல்கால் தான்தறித்து
பாண்டவர் கோயிலில் கொண்டு வைத்து
பாங்காக மூன்றான சாமமதில்
பத்தினி திரௌபதை கோயிலிலே
தேங்காய் பழத்தொடு வெற்றிலையும்
சேரவே வைத்து பூசை செய்தான்

பூசை பதினைந்து நாள் முடித்து
புதன் பதினாறாம் நாளதனில்
பாசமுறு பஞ்ச பாண்டவரும்
பத்தினி திரௌபதை தன்னோடு
நாடு நகரது தானிழந்து
வேடமும் மாறி வனம் போக
தாதனும் ஊரவர் கண்டிடவே
தகவாக பூசைகளும் தான்முடித்து
வேடமும் மாற்றி உடைதரித்து
வீமனின் கைதனில் வாள்கொடுத்து

தருமனும் தம்பிமார் நால்வரொடு
தையல் திரௌபதை தன்னோடும்
குருகுல வம்சத் துதித்தவர்கள்
குருநாடுவிட்டுச் செல்வதுபோல்
தாதனும் ஏனைய கொலுவினரும்
தாமதமில்லாமல் தான்நடந்து
ஊர்மனை காடு குளங்கடந்து
உற்றவர் உள்ளம் நெகிழ்ந்திடவே
ஆலயம் சென்று நமஷ்கரித்து
அம்மையாம் காளிதனை வணங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்ஞாத வாசமும் ஓராண்டு
ஐவரும் திரௌபதா தேவியுடன்
விராடனின் தேசம் தனையடைந்து
வேடமும் கொண்டனர் பிராமணராய்
பிராணம வேடந்தரித்ததுபோல்
பேர்பெறு பாண்டவர் இராப்பொழுது
குராமணம் வீசும் கண்ணனொடு
கூடிநடந்த கதைபோலும்
தாதனும் ஏனைய கொலுவினரும்
தையல் திரௌபதை தன்னோடும்

வந்தனர் யாவரும் ஒன்றாக
மாணிக்கப் பிள்ளையார் தனைவணங்கி
பந்தமில்லாத தாதனுமே
பாஞ்சாலி கோயிலைச் சென்றடைந்து
வீமனும் காட்டினில் தான்பறித்த
விதமான காய் இலை தானெடுத்து
பதமாய் கறிவகை தான்சமைத்து
பக்குவமாகவே அமுது வைத்து
தாதனும் ஏனைய கொலுவினரும்
தப்பாமல் உண்டு மகிழ்வடைந்தார்

அப்படியாகத் தாதனுமே
அணிபட வனவாசந் தனை நடாத்தி
தப்பிதமில்லாமலே காட்டினனே
தக்கதோர் பத்தாசி முறைப்படியே
செப்பமதாகவே பூசை பண்ணி
சேரும் பதினேழாம் நாளதனின்
முப்புரந் தன்னை எரித்தவனாம்
மூவுலகும் போற்றும் சிவனிடத்தில்
பற்குணன் பாசுபதம் பெறவே
பாங்காகக் கைலைக்குச் சென்றதுபோல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலையில் பூசை முடிந்த பின்னே
மற்றதோர் சாமமிரண்டதனில்
ஆலயந்தன்னுள் தாதனுமே
அமைவாய் தவக்கோலந் தானெடுத்து
பூநூல் தரித்து நீறணிந்து
புள்ளிமான் தோலும் மயிலிறகும்
ஆனவை யாவும் தானெடுத்து
அம்புவில் ஏந்தி நடைநடந்து
கூனல் பிறை சடை கொண்டவனை
காணப் புறப்பட்ட அருச்சுனன் போல்

ஆலயத்துள்ளே தவவேடம்
அருச்சுனன் போலவே தானெடுத்து
தாதன் தவநிலை தனைநோக்கி
தருமனின் பாதம் பணிந்த பின்னே
சீதரன் தன்னை மனத்திருத்தி
சிவனிடத்தே வரந்தான் பெறவே
காதலுறு கைலைதான் நோக்கி
கானகத்தூடே செல்வதுபோல்
தாதனும் மெல்ல அடியெடுத்து
தவநிலை நோக்கிச் சென்றனனே



இந்திரன் சொற்படி கீழ்ப்படிந்து
எழிலான ரம்பை மேனகையும்
சேரஅழகுறு ஊர்வசியும்
அருச்சுனன் தன்னெதிர் வந்துநின்று
ஆடல் பாடல் செய்து காட்டுதல்போல்
மங்கையொருத்தி முன்னடந்து
மாசாலங்காட்டி நிற்கையிலே
அங்க அசைவுகள் ஏதுமின்றி
அப்புறமாகவே தான் நடந்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாதனும் இவ்வாறு செல்கையிலே
தவத்தைக் கெடுத்திடு மூகாசுரன்
ஏனவடிவாக அருச்சுனன்முன்
எதிரிடையாகவே வந்தனனே
வந்திடும்வேளை களைப்படைந்து
வனத்திடைச் சற்று அயர்ந்திருக்க
கண்டனன் பன்றி வடிவதனை
கண்டும் காணாதவன் போற்பரமன்
நின்றிடும் வேளையில் பார்வதியும்
நேராகக் கண்டனள் பன்றிதனை

கண்டனள் பார்வதி தேவியுமே
காத்திட எண்ணினள் அருச்சுனனை
என்றிடும் எண்ணம் கொண்டவளாய்
ஏகநாயகன் தனைச் சென்றடைந்து
பன்றி வரவுதனை தனையவர்க்கு
பார்வதி தேவியும் கூறினளே
கூறிய வார்த்தை தனைக்கேட்டு
குன்றில் இருப்பவன் தான் மகிழ்ந்து
வந்தனன் அருச்சுனன் நம்மிடத்தே
வரம்பிலா பாசுபதம் பெறவே

கொண்டான் அரிய தவமதனை
கண்டோம் தவத்தின் பெருமைதனை
என்று அரனும் உமையவட்கு
ஏற்றதோர் வார்த்தைதனைக் கூறி
பன்றி வடிவம் கொண்டவனை
பாரில் வதைத்து அருச்சுனர்க்கு
வேண்டும் வரமும் கொடுத்திடவே
வேடுவ ரூபமும் தானெடுத்து
பார்வதி தேவியும் வேடுவிச்சியாய்
பச்சை மயிலோனைக் குழந்தையதாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதங்கள் நான்கும் ஞானிகளாய்
வேடுவர் கூட்டமாய் கணத்தவரும்
காடும் மலைகளும் தானதிரக்
கயிலை மலைவிட்டு தானிறங்கி
அருச்சுனன் தன்னைக் கொல்லவந்த
அரக்கனாம் பன்றிதனைக் கொல்ல
அம்மை உமையும் அரனோடு
கணத்தவராய் வந்தவேடுவரும்
கண்டனர் பன்றிவடிதனைக்
கொண்டான் சிவனும் கோபமது

கோபமது கொண்டு சிவனாரும்
கொல்ல வந்த கொடும் பன்றிதனை
வேகமதாகவே வில் வளைத்து
விட்டனன் அம்பு பிளந்துபட
பட்டதும் பன்றி வீழ்ந்துவிட
பார்வதி தேவி மனம் மகிழ்ந்து
பக்தியாய் தவம் செய்யுமருச்சுனர்க்கு
பாசுபதாஸ்திரம் தான்வழங்க
பெற்றவன் போலவே தாதனவன்
உற்றதவம் விட்டு வந்த பின்னே

சாமமிரண்டு முடிந்தபின்னே
தருமனும் தம்பிமார் நால்வரொடு
மாயவன் தானும் ஒன்றாக
மைந்தன் அரவானைத் தானழைத்து
சேமமுறப் பலிகூட்டியதுபோல்
செய்த அரவான் உருவமதை
தாதன் களப்பலி கூட்டியபின்
தக்க சரிதையைக் காட்டியபின்
தாளாத சோகமும் தானடைந்த
தருமனும் தம்பிமார் திரௌபதையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேளையில் சென்று தலைமுழுகி
வெள்ளை நிறத்துணிதானணிந்து
காளை அரவான் இறந்தமைக்கு
கதறி அழுதது போலவேதான்
தாதனும் ஏனைய கொலுவினரும்
தாளாது ஒப்பாரி வைத்த பின்னே
பூசை முடித்து வலம் வந்து
புனிதமாய் வெட்டிய தீக்குளிக்கு
காவலனும் வைத்து பலிகொடுத்து
கட்டை அடுக்கி தீமூட்டினனே

மூட்டிய தீயில் வீரைமரம்
முறையாக வெட்டி தானடுக்கி
காக்குங் கடவுள் கண்ணனையும்
நோக்கி வணங்கி பூசைபண்ணி
பத்தொடு எட்டுமுறை பூசை
பக்குவமாகவே செய்தபின்னே
மண்டாட்டுப் பாடி வலம்வந்து
மாலைவரை பூசைதான் முடித்து
சென்றனன் தாதன் கடற்கரைக்கு
சேமமாய் கும்பம் தான் நிறுத்தி



கும்பம் நிறுத்தி மடைவைத்து
குரவை சிலம்பு பறையுடனே
சங்கு முழங்கப் பூசை பண்ணி
சாட்டாங்கமாக வணங்கிய பின்
மும்முறை கும்பம்தனை வளைத்து
மூழ்கினான் தாதன் சமுத்திரத்தில்
சமுத்திரந் தன்னில் தலைமுழுகி
சாந்தான மஞ்சளும் தான் பூசி
கும்பமெடுத்து தலையேந்தி
கோயிலை நோக்கி நடந்தனனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடந்தனன் தாதன் உருவெடுத்து
நாரணன் தன்னை மனத்திருத்தி
படர்ந்த சடையுடைத் தாதனுமே
பாவை திரௌபதி போல் நடந்து
ஆலயந்தன்னைச் சுற்றிவந்து
அற்புதமான தீக்குளியில்
பாளை அரிசி மஞ்சல்தனை
பக்குவமாகவே கலந்தெடுத்து
பூவெனும் தீயில் தான் போட்டு
புனிதனாம் தாதன் நடந்தனனே

தாதனும் தீயில் நடத்தல் கண்டு
தக்கதோர் வன்னிமை ஊரவரும்
தீயில் பிறந்த திரௌபதையாம்
தெய்வத்தின் சக்தியைத் தான்பார்த்து
வேதங்கள் நான்கொடு ஐந்தான
பாரதக்கதையின் தத்துவத்தை
பாரில் உள்ளோரும் அறிந்திடவே
தாதனும் பாண்டிருப்பூரினிலே
தக்கதோர் பத்தாசி முறைப்படியே
கோயில் அமைத்தங்கு பூசைசெய்தான்

பத்தோடு ஒன்பது நாளதனில்
பாண்டுவின் புத்திரன் தருமனுக்கு
முத்தொடு ரெத்தினம் தான்கலந்த
முடி சூட்டும் பூசைதனை நடத்த
பாக்கொடு வெற்றிலை பழமுடனே
பச்சை அரிசியும் தானெடுத்து
விநாயகர் தனக்கும் சரஸ்பதிக்கும்
வேண்டியவாறே பூசைபண்ணி
வியாச பகவானை மனத்திலிருத்தி
வாழியும் பாடி ஏடுகட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருமனும் தம்பிமார் நால்வரொடு
தையல் திரௌபதி வீற்றிருக்க
தேவர் முனிவர்கள் சூழ்ந்ததுபோல்
ஊரவர் யாவரும் வீற்றிருக்க
மாயவன் கண்ணன் முடியெடுத்து
மங்கள மேளம் முழங்கிடவே
தூய தருமன் சிரமீது
துவாரகையின் நாயகன் முடிசூட்டி
நாடுநகர் தனை பெற்றதுபோல்
தாதனும் சரிதையைக் காட்டினனே

பள்ளயப்பூசைகள் யாவையுமே
பத்தாசி முறையாகத் தான் நடத்தி
அற்புதமாகவே உற்சவத்தை
அனைவரும் காணவே காட்டினனே
உற்சவந் தன்னை ஊரவரும்
உயர் எதிர்மன்னனாம் வன்னிமையும்
அற்புதங்கண்டு அதிசயித்து
ஆனந்தங் கொண்டு மகிழ்ந்தனரே
ஆண்டுக் கொருமுறை ஆலயத்தில்
அற்புதமாகவே பூசை பண்ணி

தாதனும் இப்படிச் சிலகாலம்
தங்கி இருந்து பூசைபண்ணி
சீரும் சிறப்பொடு உற்சவத்தை
செய்து வருகின்ற நாளதனில்
காடும் பொழிந்து வளம்சிறக்கும்
கண்டி நகராண்ட மன்னவனாம்
பேரிற் பெரிய விமலதர்ம
சூரியனெனும் புகழுடையான்
கோயிற் சிறப்பது கேட்டறிந்து
கொற்றவன் ஆலயங்காண எண்ணியவேளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காண்பவரெல்லோரும் அதிசயித்து
கண்டியை ஆண்ட மன்னனுக்கு
சேதியை வன்னிமை சொன்ன பின்னே
சீக்கிரமாய் கோயிலை வந்தடைந்து
கண்ணன் திரௌபதி தன்கருணை
கண்டு மகிழ்ந்து அதிசயித்து
வேண்டும் விளை நிலம் தன்னோடு
வெள்ளிக் களஞ்சியம் தான்சேர
தூண்டு திகிரி தந்தமுடன்
சுடரான் முத்துக்கள் தான்கொண்டு

விந்தை மகிழ்ந்திட ஆளுகின்ற
விமல தர்மனெனும் சூரியனும்
பந்துக்கள் சூழவே கோயில் விட்டு
பக்குவமாய் கண்டி சென்றபின்னே
வன்னிமை ஊரார் தனை அழைத்து
வருடாந்தப் பள்ளயப் பூசை செய்ய
பன்னிரெண்டு குடி மக்களுடன்
பகுதியாம் நான்கு சாகியமும்
புண்ணிய பூமியில் பூசை செய்ய
பொருத்தமாய் நிர்வாகம் தெரிந்து வைத்து

ஆண்டுக்கொரு முறை உற்சவத்தை
அலங்காரமாக நடத்துவதற்கு
வேண்டும் உதவியும் தான்கொடுத்து
விதமாகப் பூசையும் தான் நடத்தி
கலிங்கர் குலத்துக் கதிபதியாய்
களங்க மில்லாமலே ஆண்டுவந்தான்
தாதனும் தன்பணிதான் முடித்து
தக்க கடமைகள்தான் முடித்து
வேதியன் மீண்டும் தன்நாடு
வெற்றிக் களிப்போடு சென்றனனே

**நன்றி**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய வழிபாட்டின்போது கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள்

ஆலய உற்சவநேரங்களில் ஆலயங்களுக்கு வரும் பக்த அடியார்கள் கடைப்பிடிக்க வேண்டிய சில விதிகள் பற்றிஆராய்வோம். இந்து மதத்தில் நம்முன்னோர்கள் பலவிதிமுறைகளை கடைப்பிடித்து ஆலயத்தூய்மையினையும், வழிபாட்டுத்தூய்மையினையும் காப்பாற்றி பயன்களைப் பெற்று வந்தார்கள்.தற்காலத்தில் இவ்விதிமுறைகள் அருகி வருகின்றதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. ஓர்கடமையாக எண்ணியே பெரும்பாலும் வழிபாடுகள் நடைபெற்று வருகின்றது.இவைகளில் மிகமுக்கியம் ஆலயங்களுக்கு அடியார்களின் ஒழுக்கமான வருகையாகும்.தூய்மையான வழிபாடுபற்றி சில விடையங்களை தெரிந்து எம்மை மேம்படுத்திக் கொள்வோமாக.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. ஆலயங்களுக்கு வரும் பெண்கள் குறிப்பாக தலை விரிகோலமாக வருதல் தவிர்த்தல் வேண்டும்.

* தலைவிரிகோலம் : அபசகுணம் , நற்காரியங்களுக்கு கூடாது, எமது முடி ஆலயத்தில் விழுவதனால் பல பூஜைப் பொருட்கள் அசுத்தப்படும்

2. முக்கியமாக ஆலயத்தினுள் வருமுன் கால்களைக் கழுவி வருதல் வேண்டும்.

* வரும் பாதைகளில் பலவிதமான அசுத்தங்களை மிதிக்ககூடும் என்பதனால்.

3. அர்ச்சனைப் பொருட்களைக் கொண்டு வரும் போது பொருட்களைக் கழுவுதல்

* தேங்காயை துப்பரவு செய்து கழுவி வருதல் அவசியம். சிலர் கடைகளில் தேங்காயை வாங்கியபடியே கொண்டுவருவர்.

4. ஆலய வளாகத்தில் பூஜை நேரங்களில் தேவையற்றுக் கதைத்தல், கையடக்கத் தொலைபேசியில் பேசுதல் தவிர்க்கப் படுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. ஆலய வழிபாட்டின் போது எமது அங்கங்கள் தொழும் நிலை.

அ. கண் – சுவாமியைப் பார்த்து வழிபடல்.

ஆ. காது – மந்திரங்கள், தேவாரங்களை கேட்டு வழிபடல்.

இ. மூக்கு – ஆலய நறுமணங்களை முகர்ந்து வழிபடல்.

ஈ. வாய் – சுவாமி நாமங்களையும், தேவாரங்களையும் பாடி வழிபடல்.

உ. கை – கூப்பி வழிபடும் முறை.

ஊ. கால் – ஆலய பிரகாரத்தை சுற்றிவந்து வழிபடல்.

6. திரைச்சீலை போடப்பட்டிருக்கும் போதுவழிபடுதல், நமஸ்கரித்தல் கூடாது.

7. விழுந்து வணங்கும் போது கால்நீட்டும் பக்கம் தெய்வ சன்னிதிகளோ பெரியோர்களோ இல்லாது பார்த்துக் கொள்ளுதல் வேண்டும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது
எது நடக்க இருக்கிறதோ
அதுவும் நன்றாகவே நடக்கும்
உன்னுடையது எதை இழந்தாய்
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு
எதை நீ படைத்திருக்கிறாய்
அது வீணாகுவதற்கு
எதை நீ எடுத்துக்கொண்டாயோ
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது
எதைக் கொடுத்தாயோ
அது இங்கேயே கொடுக்கப்பட்டது
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாகிறது
மற்றொரு நாள்
அது வேறொருவருடையதாகும்.



இந்த மாற்றம் உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமுமாகும்
**பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org